# தூதன்


தூதன்-27 | செப்டம்பர் 2018 | தூது-8


அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும், அவர் நாமத்தைப்பற்றிக் கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள் அவர் அவர்களுக்கு மறு உத்தரவு அருளினார். சங்கீதம் 99:6





Private Circulation only



தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 04 |
| உதவி போதகர் மடல் – தப்புவிக்கும் தேவன் | 05 |
| உதவி ஆயரம்மா மடல் | 08 |
| உதவி போதகர் மடல் – துணைபுரியும் கர்த்தர் | 10 |
| செயலர் மடல் | 13 |
| Purification / Sanctification | 14 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 16 |
| ஆராதனை பாடல்கள் | 18 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 19 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| அத்திமரம் | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| தெரிந்து கொள்வோம் | 26 |
| Health Tips | 28 |
| Children's Corner | 31 |
| Birthday Celebrants | 34 |
| Wedding Anniversary | 37 |
| Hebron Part - 2 | 39 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

நீங்கள் ஏக சிந்தையும், ஏக அன்புள்ளவர்களாயிருந்து,
இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து,
என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். பிலிப்பியர் 2:2

Then make my joy complete by being like-minded,
having the same love, being one in spirit and purpose. Philippians 2:2

அப்படியானால் நீங்கள் ஒரே எண்ணமும், ஒரே அன்பும், ஒரே உள்ளமும் கொண்டவராய்த் திகழ்ந்து, ஒரு மனத்தவராய் என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள். - பொது மொழிபெயர்ப்பு.

அன்பிற்கினிய சகோதர, சகோதரிகளே,

மீண்டும் ஒரு புதிய மாதத்தின் மகிழ்ச்சியான எதிர்பார்ப்புடன் உங்களைச் சந்திக்கும் தருணத்தைத் தந்த ஆண்டவருக்கு எம் நன்றிகள் பல.

செப்டம்பர் மாதம் தென்னிந்தியத் திருச்சபையின் இறைமக்களாகிய நமக்கு மிகவும் முக்கியமான, மகிழ்ச்சியான மாதம். ஏனென்றால் கிறிஸ்தவத்தின் பல பிரிவுகளாய் சிதறிக் கிடந்த நம்மை ஆண்டவரின் பேரருளும், நம் திருச்சபைத் தலைவர்களின் தொலைநோக்கும் ஒரே ஐக்கியத் திருச்பையாய் 27-09-1947 அன்று உருவாக்கப்பட்ட நன்னாளை நினைவுகூர்ந்து நம் ஆண்டவருக்கு புகழ்மாலை சூட்டும் மாதம் இது.

இந்தத் திருச்சபை ஐக்கியத்தின் முதன்மை நோக்கத்தை யோவான் 17:21 "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்க" என்ற இறைவார்த்தை வழியாய் நாம் உணர்ந்திருக்கின்றோம்.

தூய பவுலடிகளார் பிலிப்புத் திருச்சபை இறைமக்களுக்கு இம்மடலை எழுதும்போது, அத்திருச்சபை எத்தகைய வாழ்வு நெறியை, சான்று நெறியை வெளிப்படுத்தவேண்டும் என்ற தமது இதயத்தின் எதிர்பார்ப்பை 2:2 வசனங்களில் வெளிப்படுத்துகின்றார்.

We have been called to celebrate the joyful witnessing life with.
Like minded, with same love, with same spirit.

நீங்களும் நானும் ஒரே எண்ணமும், ஒரே அன்பும், ஒரே உள்ளமும் கொண்டவராய், ஒரே மனதுடன் கிறிஸ்துவின் மகிழ்ச்சியை நிறைவாக்கி நமது சாட்சியின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தவே அழைக்கப் பட்டிருக்கின்றோம்.

What is Like minded - எது ஒரே எண்ணம் :- நமது தென்னிந்தியத் திருச்சபை உருவாகும்போது பல்வேறு பாரம்பரியங்கள், பல்வேறு பின்னணியங்கள், பல்வேறு மொழிகளை உள்ளடக்கிய மக்களாகத்தான் நாம் இருந்தோம். ஆனால் தூய ஆவியானவர் பிரிவுகள் பல இருப்பினும் எண்ணங்களை ஒன்றிணைத்தார். அதுதான் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவுக்குள் நாம் அனைவரும் ஒன்றாகவும், ஆண்டவரின் இரத்தத்தாலே மீட்கப்பட்ட அவருடைய பிள்ளைகள் என்ற எண்ணம்.

What is Same Love - எது ஒரே அன்பு :- அது கிறிஸ்துவின் அன்பு. அந்த அன்புக்கு எல்லைகள் இல்லை, அது நிறமறியாது, மொழியறியாது, ஏற்றத்தாழ்வறியாது. எல்லாவற்றையும் கடக்கவும், எல்லாருக்குள்ளும் ஊடுருவிச்சென்று மகிழ்வையும், அமைதியையும் விதைத்து வளர்க்கக்கூடிய ஆற்றல் அந்த ஒரே அன்புக்கு உண்டு.

What is Same Spirit - எது ஒரே உள்ளம் :- Spirit என்ற ஆங்கிலச் சொல்லிற்கு ஆவி, ஆன்மா, மனநிலை, உள்ளம் என பல பொருள் உண்டு. ஆண்டவர் நம் அனைவரையும் ஒரே உள்ளத்துடன் இணைந்து வழிபட இத் தென்னிந்தியத் திருச்சபையின் ஐக்கியத்தில் இணைத்திருக்கிறார். ஒருவருக்காக ஒருவர் வாழ, ஒருவர் மகிழ்வை மற்றவருடன் பகிர, ஒருவர் பாரத்தை மற்றொருவர் சுமக்க, இப்படிப்பட்ட ஒரே உள்ளத்துடன் இணைந்து பயணிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

தென்னிந்தியத் திருச்சபையின் 71-ம் ஆண்டினை மகிழ்வுடன் கடந்து செல்லும் இவ்வேளையில் ஒரே எண்ணமும், ஒரே அன்பும், ஒரே உள்ளமும் கொண்டோராய், கிறிஸ்துவின் மகிழ்ச்சியை நிறைவாக்கிட நமது பற்றுறுதிப் பயணம் தொடருவோம்.

ஆண்டவரின் அருளாசி நம் அனைவருடனும் தங்கியிருப்பதாக.

ஆண்டவரின் அருட்பணியில்
உங்கள் ஆயர்
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

## NEW ARRIVAL

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Shem Joshua
S/o.Mr.Noah Santha Seelan & Mrs.Joseline Rajammal
19-06-2018

Jennis Jacob
S/o.Mr.Jacob Samuel & Mrs. Preethi Packya Jacob
29-06-2018

# ஆயரம்மா மடல்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். 8 மாதங்களைக் கடந்து 9-வது மாதத்தைக் காணக் கிருபை செய்த ஆண்டவருக்குத் துதியும் மகிமையும் உண்டாவதாக.

இந்த செப்டம்பர் மாதம், நமக்கு ஒரு விசேஷித்த மாதம் ஏனென்றால் CSI உருவான நாள் செப்டம்பர் 27. ஆகவே யோவான் 17:21 வாசிக்கிறபிரகாரமாக, "நாம் அனைவரும் ஒன்றாய் இருக்க" தேவன் நம்மை அழைத்து இருக்கிறார். ஆண்டவர் வரும் நாளில் அவரோடு நாம் செல்லும்போது ஆண் என்றும் இல்லை, பெண் என்றும் இல்லை, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடு இல்லை. நாம் அனைவரும் ஒன்றாய் அவருடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க ஆண்டவர் எதிர்பார்க்கிறார்.

இந்த உலகத்தில் வாழுகிற நமக்கு எத்தனைப் போராட்டங்கள், தோல்விகள், வேதனைகள், கஷ்டங்கள், வியாதிகள் இருந்தபோதும் ஆண்டவர் நம்மோடு இருந்து நம்மை நடத்துகிறார் என்பது தின்னம். ஆனால் நாம் தான் அதை உணராத மக்களாய் வாழ்கின்றோம்.

### நூற்றுக்கதிபதியின் விசுவாசம் :

மத்தேயு 8:5-13 வரை படிக்கும்போது நூற்றுக்கு அதிபதி ஆண்டவரிடம் வந்து தன்னுடைய வேலைக்காரனின் சுகத்திற்காக ஆண்டவரிடம் வேண்டிக்கொள்கிறான். 100 பேருக்கு அதிபதியாய் உள்ள ஒரு ரோம அதிகாரி தன் வேலைக்காரனுக்காக ஆண்டவரிடம் வேண்டிக்கொள்வது பெரிய விஷயம். அவனுக்கு எல்லாவற்றிற்கும் ஆட்கள் இருக்கிறார்கள். ஆனாலும் தன்னுடைய வேலைக்காரன் ஒருவன் திமிர்வாதத்தினால் கஷ்டப்படுவதை அவன் பார்த்து அவனுக்காக ஆண்டவரிடத்தில் போய் கேட்கிறான். அதை ஆண்டவர் பார்த்து (ஒருவேளை நிதானித்து இருக்கலாம்) நான் வந்து அவனை சுகப்படுத்துகிறேன் என்று சொல்கிறார். ஆனால் நூற்றுக்கு அதிபதியோ (வ.8) நீர் என் வீட்டிற்கு வருவதற்கு நான் தகுதி அற்றவன் என்று சொல்லி, ஆண்டவரின் வார்த்தையில் வல்லமை உண்டு என்று அறிந்து, ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் ஆண்டவரே, என் வேலைக்காரன் குணமடையவான் என்று மறுமொழி கூறுகிறான். ஆனால் இயேசுவோ, அவனைக் குறித்து தனக்குப்பின்வந்த மக்களிடம் சாட்சி சொல்கிறார். ஆண்டவருக்கு முன்பாக நூற்றுக்கு அதிபதி தன்னைத் தாழ்த்திக் கொண்டதை ஆண்டவர் அங்கீகரிக்கிறார். இஸ்ரவேலர்களுக்குள்ளும் நான் இப்படிப்பட்ட ஒரு விசுவாசத்தைக் காணவில்லை. இஸ்ரவேல் மக்களிடம் இப்படிப்பட்ட ஒரு விசுவாச பக்தி இல்லை என்று சொல்லி, நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவன் வேலைக்காரன் குணமடைந்தான்.

நாமும்கூட கடவுளின் கிருபையால் அனேக ஆசீர்வாதங்களைப் பெற்று, கடவுள் நம்மை அநேகருக்கு மத்தியில் உயர்த்தி வைத்திருக்கிறார். ஆனால் நாம் எந்த மனநிலையில் இருக்கிறோம்.

1947-ம் ஆண்டு செப்டம்பர் 27-ம் நாள் முதல், இந்த ஆண்டு இந்த நாள் வரை கடவுள் நம்மைக் கைவிடாமல் காத்து வந்திருக்கிறார். 2018 செப்டம்பர் மாதத்தில் இருக்கிற நாம் எப்படி இருக்கிறோம்.

ஆண்டவர்மீது விசுவாசத்தோடும், நூற்றுக்கு அதிபதியைப்போல தாழ்மையோடும், நம்முடைய தென்னிந்தியத் திருச்சபையோடு ஒற்றுமையாயும் இருக்கிறோமா என்பதை நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.

கடவுள் நம்மைக் குறித்துக் கொடுக்கும் சாட்சி எப்படி இருக்கும்?

தேவன் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

இப்படிக்கு
கிறிஸ்துவின் பணியில்
உங்கள் ஆயரம்மா
மேரி விக்டர்.

## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபையின் அங்கத்தினர்
Mrs. Vinitha Jefferson அவர்களின் தகப்பனார்
Mr.S.Sellam அவர்கள் 08-07-2018 அன்றும்
நமது சபையின் அங்கத்தினர்
Mrs. Rajini Benjamin அவர்களின் சகோதரரும் இராஸ் அல் கைமா கிளைச்சபையின் முன்னாள் செயற்குழு அங்கத்தினருமான
Mr.Ebenezer Mal அவர்களின் துணைவியார்
Mrs.Vasantha Mal அவர்கள் 13-07-2018 அன்றும்
நமது சபையின் அங்கத்தினர்
Mr. Kingsly Rajamony அவர்களின் தாயார்
Mrs.A.Roselet அவர்கள் 11-08-2018 அன்றும்
நமது சபையின் அங்கத்தினர்
Mr. Smiley Peter Thompson அவர்களின் தகப்பனார்
Mr.S.Srinivasagam அவர்கள் 22-08-2018 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# உதவி போதகர் மடல்

## தப்புவிக்கும் தேவன்

முத்திரைகளை உடைக்க ஜெயங்கொண்டிருக்கின்ற, தாவீதின் வேரான நம்முடைய ஆண்டவரான இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

கிறிஸ்தவ வாழ்வு கழுகைப்போல செட்டைகளை அடித்து, உயரப் பறக்கும் அனுபவமுடையது. உயரப் பறப்பது என்பது உலகத்திற்குரியவைகளோடு தொடர்பில்லாத மேலான, மகிமையான, உன்னத அனுபவங்களால் நிரம்பிய வாழ்வு. இந்த அனுபவத்தை மோசே கூறும்போது, "கன்மலையின் உயர்ந்த இடத்தில் வா, என்னைக் காண்பாய்" என தேவன் அழைத்துத் தம்மை அவனுக்கு வெளிப்படுத்தியதைக் காட்டுகிறான். அப்படியே தாவீதும், தேவன் தன் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தினதாய் சொல்கிறான். ஆனால், நாம் உயர பறக்கும் அனுபவத்தை அடையமுடியாதபடி, பிசாசு, சில மறைந்திருக்கும் கண்ணிகள் மூலம், நம்மைச் சிந்திக்கவைத்து விடுகின்றான். பரிசுத்தமின்மை, ஜெபிக்கமுடியாத நிலை, அவிசுவாசம், தேவஅன்பில் நிலைபெற்று வளரமுடியாமை, பயம், வியாதி, பெலவீனம் என்னும் கண்ணிகள் நம்மைச் சிக்கவைக்க பெலமுள்ளதாயுள்ளது. கண்ணிகளைத் தெறிக்கச் செய்து, நம்மைத் தப்புவித்து பறக்கச் செய்யும் வல்லமையையுடைய தேவன் நமக்கருளும் வாக்குத்தத்தம்:

**கண்ணித் தெறித்தது, நாம் தப்பினோம். சங்.124:7(b)**

இந்த கண்ணிகளை உடைக்க அதிகாரமுடைய யூதா கோத்திரத்துச் சிங்கமான நம்முடைய ஆண்டவரான இயேசுகிறிஸ்துவின் வல்லமை வெளிப்பட்டு, நம்மைத் தப்புவித்து விடுவிப்பதாக.

### 1.ஒப்புரவாகுதல் கண்ணியை உடைக்கும் (மத்தேயு 5:25):

இந்த உவமையில் 'எதிராளி' என சொல்லப்படுபவர்: நம்முடைய ஆண்டவராகிய 'இயேசுகிறிஸ்துவே'. தேவசித்தத்தை அறிந்து, அதற்குக் கீழ்ப்படியாமல் ஓடும் எல்லாருடைய வாழ்விலும், சிறைச்சாலையென்னும் கண்ணியில் அவர்கள் அகப்படும்படி, இயேசுகிறிஸ்துவே அவர்களை எதிர்த்து வருகின்றார். சிம்சோன், கர்த்தருடைய வழியை விட்டு விலகிச்சென்றபோது, அநேகமுறை கட்டப்பட்டான். (நியா.16:8,12,14,21). ஆனால் தேவனிடத்தில் ஒப்புரவாகும்போது (மத்.5:25) கண்ணி உடைக்கப்பட்டு, விடுதலை உண்டாகும்.

நம்முடைய வழி மாறுபாடுள்ளதாய் இருந்தால், தேவன் நமக்குச் சத்துருவாக வெளிப்படுவார். அவ்வழியில் முள்ளுகளும், கண்ணிகளும் உண்டு (நீதி.22:5). அந்தக் கண்ணியை உடைக்கவே, தேவன் ஒப்புரவாகுதலின் ஊழியத்தை ( 2 கொரிந்.5:18) இயேசுகிறிஸ்து மூலமாய் ஏற்படுத்தினார். அந்த ஒப்புரவாகுதலின் உபதேசம் நமக்குள் கிரியை செய்ய, இம்மாதத்தில் தேவன் நமக்கு அநுக்கிரகம் பண்ணுவார். தேவனோடு ஒப்புரவாகுவோம். கண்ணி உடையும். நாம் தப்புவோம்.

### 2.வெளிப்பாடு கண்ணியை உடைக்கும் (தானியேல் 2):

தேவனுக்குத் தன்னை அர்ப்பணித்த தானியேலையும், கண்ணி தாக்காமல் இருக்கவில்லை. பாபிலோன் ராஜா, தான் கண்ட சொப்பனத்தை விளக்காததால், ஞானிகளைக் கொலைசெய்யவேண்டுமென கட்டளையிட்டான் (2:13). இதனால் ஞானியாகிய தானியேலையும் மரணக் கண்ணி சூழ்ந்துகொண்டது. அப்போது தானியேல் ஜெபத்தின் மூலமாக, மறைபொருள்களை வெளிப்படுத்துகின்ற பரலோக தேவனிடமிருந்து வெளிப்பாட்டைப் பெற்றான். அந்த வெளிப்பாட்டினால், ராஜசட்டமாகிய மரணக்கண்ணி உடைந்தது. உயர்வு வந்தது (2:49).

நம் வாழ்விலும், நமக்கு மேலதிகாரத்தில் இருப்பவர்களால் கண்ணிகள் வரலாம். அவைகள் உடைய, வெளிப்பாடு அவசியம். வெளிப்பாடு என்பது தேவவசனமே, நாம் அதின்மேல் கொண்டிருக்கும் விசுவாசமே. நாம் ஜெபிக்கும்போது, ஆராதிக்கும்போது, வேதத்தைத் தியானிக்கும்போது உண்டாகும் வெளிப்பாடு மறைந்திருக்கும் கண்ணிகளை உடைக்கும். உயர்ந்த ஸ்தானத்தில் நம்மை நிறுத்தும்.

### 3. அறிக்கை கண்ணியை உடைக்கும் (தானியேல் 4:29-37):

நேபுகாத்நேச்சார் தன் வல்லமையை, தான் கட்டினவைகளைக் குறித்து, மேன்மை பாராட்டி பேசின வார்த்தை (வ.30) அவனைக் கண்ணியில் அகப்படுத்தியது. மிருகத்தின் சுபாவம் வந்தது (வ.33). நேபுகாத்நேச்சார் ஸ்தோத்தரித்து, தேவனுடைய கர்த்தத்துவத்தை அறிக்கை செய்தபோது, கண்ணி உடைந்தது. இழந்துபோன ராஜாவின் முகக்களை திரும்பவந்தது. முன்பிருந்ததைவிட அதிக மகத்துவம் கிடைத்தது (வ.36).

நம்முடைய வார்த்தைகளைத் தேவன் கவனித்துக்கொண்டே இருக்கிறார். பெருமையைப் பேசும் வாய் நமக்குக் கண்ணிகளை வருவிக்கும். ஆசீர்வாதங்கள் அவர் கரத்திலிருந்தே வருகிறதென்றும், சுய பெலத்தினாலோ, சுயசக்தியினாலோ ஒன்றுமாவதில்லை என (உபா.8:17) அறிந்து, அவரை ஸ்தோத்தரித்து அறிக்கையிட்டால் கண்ணிகள் உடையும். பேர்வாழ்வு உண்டாகும்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட், உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

**சிந்திக்க ஒரு சிறுகதை**

இந்த ஆண்டு பள்ளியில் நடக்கும் ஓவியப்போட்டியில் எப்படியாவது முதல்பரிசு பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு தயா வீட்டில் படம் வரைந்து பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய இளையதம்பி ஆலன் அருகில் விளையாடிக் கொண்டிருந்தான். அன்று சனிக்கிழமை விடுமுறை நாள் என்கிறபடியால் இருவரும் பள்ளிக்குச் செல்லவில்லை. உள்ளேயிருந்து அம்மா, பிள்ளைகளா, சாப்பாடு ரெடி! வாருங்கள் என்று அழைத்தார்கள். ஆலன் தயாவைத் தாண்டி வேகமாக ஓடினான். அவன் தயாவின் படத்தில் மிதித்துவிட்டான்.

அம்மா, ஆலன் என்ன செய்திருக்கிறான் பார்த்தீர்களா? என கத்தியபடியே தயா கசங்கிப்போன காகிதத்தைக் காட்டினாள். ஆலன் அவளைத் திரும்பிக்கூடப் பார்க்காமல், டிபன் சாப்பிட்டுவிட்டு, பந்தை எடுத்துக் கொண்டு விளையாடச் சென்றுவிட்டான். அம்மா தயாவை சமாதானப் படுத்தினார்கள்.

தயா, நீ ஆண்டவரை ஏற்றுக்கொண்டு இயேசுசாமியின் பிள்ளையாக இருக்கிறாய் அல்லவா? இயேசுசாமி உன்னுடைய தவறுகளையெல்லாம் மன்னித்திருக்கிறார். தம்பி செய்யும் தவறுகளை நீ பொறுமையாகச் சகித்துக்கொள்ளவேண்டும் என்று சொன்ன அம்மா, எபே.4:1-3 வசனங்களை வாசித்தார்கள். மேலும் கொலோ. 3:12,13 வசனங்களை வாசித்து தம்பியை மன்னிக்கவேண்டுமென சுட்டிக் காட்டினார்கள். அதன்பின் தயா தம்பி மீது கோபப்படுவது கிடையாது என்றாலும் அவன் குறும்புக்காரனாகவே வளர்ந்து வந்தான்.

அடுத்த சனிக்கிழமை பக்கத்துவீட்டு பிரியா தயாவின் வீட்டிற்கு விளையாட வந்திருந்தாள். திடீரென ஆலனுக்குக் கோபம் வந்துவிட்டது. அவன் ஓடிக்கொண்டிருந்த பிரியாவைக் கீழே தள்ளிவிட்டான். அவள் சத்தமாக அழத் தொடங்கினாள். ஓடிவந்த தயாவின் அம்மா அவளைத் தூக்கி விட்டார்கள். நல்லவேளை அவளுக்கு எந்தக்காயமும் ஏற்படவில்லை. பிரியா போனபின், தயா அம்மாவிடம், பார்த்தீர்களா அம்மா, ஆலன் திருந்தவே மாட்டான் என குறை கூறினாள். அப்படியெல்லாம் சொல்லாதே! அவனும் இயேசுசாமியை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ஊக்கமாக ஜெபி என்ன அம்மா ஆலோசனை கூறினார்கள்.

அன்றிரவு தயா படுக்கைக்குச் செல்லும்போது, ஆலன் அங்கே இல்லை. முழங்காற்படியிட்ட அவள், அன்பான இயேசுசாமி, ஆலனை உம்முடைய பிள்ளையாக மாற்றியருளும். அப்போது அவன் நல்ல காரியங்களை மட்டுமே செய்வான் அல்லவா? என்று ஜெபித்தாள். அவளுக்குத் தெரியாமல் ஆலன் இதைக் கேட்டுக்கொண்டிருந்தான். தன் அக்கா தனக்காக ஊக்கமாக ஜெபிப்பது அவனுடைய மனதைத் தொட்டது. கொஞ்ச நாட்களாக ஆலன் தவறு எதையும் செய்யாமல் இருப்பதைக் காண தயாவிற்கு ஆச்சரியமாக இருந்தது. அவனுக்காக அவள் தொடர்ந்து ஜெபித்து வந்தாள்.

தயா ஓவியப் போட்டிக்காக படத்தை வரைந்து கொடுக்கவேண்டிய நாள் நெருங்கியது. அவள் முதலில் பென்சிலில் படத்தை வரைந்து வைத்தாள். ஒரு அழகான இயற்கைக்காட்சியின் படம் அது. ஆனால் அவள் படத்துக்கு வண்ணம் தீட்டி முடிப்பதற்குள் அவளுக்கு எதிர்பாராத வகையில் காய்ச்சல் வந்துவிட்டது. இன்னும் இருநாட்களில் படத்தைப் போட்டிக்குச் சமர்ப்பிக்கவேண்டும். அவளைச் சோதித்த டாக்டர் 2 நாட்கள் படுக்கையில் இருக்கவேண்டுமென சொல்லிவிட்டார்.

அம்மா உதவினால், தானே வரைந்த படம் என சொல்லமுடியாது. என்ன செய்வது என கண்கள் கலங்கியது. அதைப்பார்த்த ஆலன் அம்மாவின் உதவியால், தயாவை கட்டிலில் சாய்ந்து அமரும்படி செய்தான். அவள் மடியில் ஒரு Cardboard-ஐ வைத்து அதன்மேல் அவளின் படத்தை வைத்தான். காகிதம் விலகாமலிருக்க கிளிப்புகளை மாட்டினான். அவள் கேட்கும் வண்ணப் பென்சிலை எடுத்துக் கொடுத்தான். இடையிடையே சோர்வாக இருக்கும்போது தயா அப்படியே படுத்துக்கொள்வாள்.

வண்ணம் தீட்டி முடித்தவுடன் தயா தேவனுக்கு நன்றி கூறினாள். அப்போது ஆலன், அக்கா, நானும் இயேசுசாமியின் பிள்ளையாக மாறவேண்டும் எனக் கேட்டான். சந்தோஷமடைந்த தயா, ஆலன் தனது தவறுகளை ஒவ்வொன்றாக இயேசுசாமியிடம் அறிக்கையிட்டு, அவரை ஏற்றுக்கொள்ளும்படி வழிநடத்தினாள். ஜெபித்து முடித்தவுடன் ஆலன், நான் இப்போது இயேசுசாமியின் பிள்ளை என சந்தோஷமாகக் கூறினான்!. தயா நீடிய பொறுமையோடு ஜெபித்து வந்தது பலன் தந்தது!

வேதவாசிப்புப் பகுதி : எபேசியர் 4:1-3
மனப்பாட வசனம் : கொலோசெயர் 3:12,13

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி∴பர் ஆல்வின்,
உதவி ஆயரம்மா.

# உதவி போதகர் மடல்

## துணை புரியும் கர்த்தர்

திருமறைப்பாடம் : 1 இராஜாக்கள் 19:9-14, மத்தேயு 14:22-33
தியான வசனம் : மத்தேயு 14:27.

"உடனே இயேசு அவர்களோடே பேசி: திடன்கொள்ளுங்கள், நான்தான் பயப்படாதிருங்கள் என்றார்"

எல்லாருக்கும், எப்போதும் துணைபுரியும் கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். புதிய மாதமாகிய செப்டம்பர் மாதத்தில் நாம் பிரவேசிக்கத் துணைபுரிந்த கர்த்தருக்கு நன்றி சொல்லுவோம். கடந்த மாதத்தில் பத்திரமாக பாதுகாத்த கர்த்தரைத் துதிப்போம்.

அமெரிக்காவில் உள்நாட்டுப்போர் நடந்துகொண்டிருந்த நேரம். மிகவும் துன்பமான காலக்கட்டம். ஜனாதிபதியாக ஆபிரகாம் லிங்கன் இருந்தார். ஒருநாள் ராணுவத் தளபதிகள் போர் பற்றிய முக்கியமான கலந்துரையாடலுக்காக காலை 5 மணிக்கு ஜனாதிபதியைத் தேடி அவரது இல்லத்திற்கு வந்தார்கள். அந்த அதிகாலை வேளையில் அவர் தன்னுடைய அறைக்குள் யாரோ ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தது இவர்களின் காதுகளுக்குக் கேட்டது. வெளியே காத்துக்கொண்டு நின்றார்கள். சிறிது நேரம் கழித்து ஜனாதிபதி தனது அறைக்கதவைத் திறந்து, தளபதிகளை தன்னுடைய அறைக்குள் அழைத்தபோது, அங்கு யாரும் இல்லாததைக்கண்டு திகைத்து நின்றனர். "இதுவரை நீங்கள் யாரோடோ பேசிக்கொண்டிருந்தீர்கள் என்று நினைத்தோம்" என்று தளபதிகள் சொன்னபோது, "ஆம், நான் ஆண்டவரோடு பேசிக் கொண்டிருந்தேன்" என்று பதில் தந்தாராம்.

துன்ப துயரங்களும், வேதனை சோதனைகளும் இல்லாத மனிதர்கள் யாரும் கிடையாது. ஆனால் இப்படிப்பட்ட கடினமான காலகட்டங்களிலும் கர்த்தரின் கரம் கைப்பிடித்து தங்களை வழிநடத்துவதை உணரும் மனிதர்களே துன்பங்களை வெற்றி கொள்கின்றனர்.

இம்மாதம் தென்னிந்தியத் திருச்சபை வரலாற்றில் மிக முக்கியமான மாதம். 1947-ம் ஆண்டு செப்டம்பர் 27-ம் நாள் சென்னையிலுள்ள புனித ஜார்ஜ் கதீட்ரல் பேராலயத்தில் தென்னிந்தியத் திருச்சபை உருவானது. இவ்வாண்டு CSI ஆரம்பமாகி 71-ம் ஆண்டின் நிறைவில், நாம் மகிழ்ந்து திருச்சபையின் ஒன்றிப்பின் மாமன்றங்களில் கருத்துக்களைப் பகிர்ந்த சபைத்தலைவர்களை நினைப்போம். எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தரின் துணை முழுமையாகக் காணப்பட்டது என்பதில் ஐயமில்லாமல் கர்த்தரைத் துதிப்போம். நன்றி சொல்லுவோம்.

ஈடு இணையற்ற இறைவனின் துணை நமக்கு எப்போதெல்லாம் உண்டு என்ற செய்தியை தரப்பட்டுள்ள திருமறைப் பகுதியிலிருந்து தியானிப்போம்.

### 1.விசுவாச வளர்ச்சி நேரங்களில் இறைவனின் துணை (மத்தேயு 14:31,32):

தொடக்கக் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவைப் பின்பற்றியதன் பொருட்டு அனேக வேதனைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சீறிப்பாயும் விலங்குகளால் சின்னாபின்னப்படுத்தப்பட்டனர். கொதிக்கும் எண்ணெய்க் கொப்பறையில் கொதிக்க வைக்கப்பட்டனர். தீப்பந்தங்களாக உயிரோடு இரவு நேரங்களில் கொளுத்தப்பட்டனர். அநியாயமாக பழி சுமத்தப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்டனர். இப்படிப்பட்ட அவர்களின் எண்ணற்ற வேதனையின் பொருட்டு, விசுவாசத்தில் தடுமாற ஆரம்பித்தனர். இப்படிப்பட்ட சூழலில்தான் தூய மத்தேயு இன்றைய நற்செய்தியை அம்மக்களுக்கு எழுதுகிறார். படகாகிய தொடக்கத் திருச்சபையில் உள்ள சீடர்களாகிய தொடக்கக் கிறிஸ்தவர்கள் அலைகளாகிய பிரச்சனைகளால் வீழ்த்தப்பட்டாலும், இயேசு அருகிலேயே இருக்கிறார். அவரின் துணை அவர்களுக்கு உண்டு என்ற நம்பிக்கை செய்தியைத் தருகிறார். மேலும் துன்பங்கள் வரும்வேளை எத்தகைய மனப்பக்குவத்துடன் நாம் இருக்கவேண்டும் என்பதையும் இன்றைய நற்செய்தி வழியாக தூய மத்தேயு எடுத்துரைக்கிறார்.

இயேசுவை நோக்கி நடக்க ஆரம்பித்த பேதுரு, முதலில் தன்னுடைய கண்களை இயேசுவின்மீது பதியவைத்து நடந்தார். ஆனால் எப்போது தன்னுடைய கவனத்தைப் பெருங்காற்று மீது திருப்ப ஆரம்பித்தாரோ, அப்போதே மூழ்க ஆரம்பித்தார். அதாவது வாழ்வில் துன்பங்கள் "என்னுடைய வாழ்வில் இத்தனை துன்பங்கள் உண்டே! நான் என்ன செய்யப்போகிறேன்?" என்று சுய இரக்கத்தில் மூழ்கினோம் என்றால் வாழ்விலும் மூழ்கிப்போவோம். மாறாக துன்ப வேளைகளில் ஆண்டவர்மீது நம் கண்களைப் பதியவைத்து, "அவரே என் கன்மலை, நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை" (சங்கீதம் 62:2) என்ற உண்மையால் உந்தப்பட்டு அவரில் நம் நம்பிக்கை எனும் நங்கூரத்தை உறுதிப்படுத்தினோம் என்றால் துன்பப்புயல்கள் நம் வாழ்வுக் கப்பலை வீழ்த்த முடியாது என்பது முற்றிலும் உண்மை.

### 2. நீதிக்கான போராட்டத்தில் இறைவனின் துணை (1 இராஜா.18:19,20):

எலியாவுக்கும் பாகால் இறைவாக்கினர்களுக்குமிடையேயான பிரச்சனை, கர்மேல் பர்வதத்தில் உண்மைக்கடவுளை நிரூபித்தது முதலியவை நாம் 1 இராஜாக்கள் 18-ம் அதிகாரத்தின் வசனங்களில் படிக்கின்றோம். இதை இரண்டு வழிபாட்டுக்குழுக்களுக்கிடையேயான பிரச்சனையாக பார்ப்பது மட்டுமல்ல. இது பொய்மைக்கும் உண்மைக்கும் இடையேயான பிரச்சனை.

ஆணவத்திமிரால் செயல்பட்ட யேசபேல் அரசிக்கும், தாழ்ச்சியோடு இறைவாக்குப்பணியைச் செய்துவந்த எலியாவுக்குமிடையேயான பிரச்சனை. நீதியைக் காலில் போட்டு மிதித்து அநீதியால் செயல்பட்ட அரசனுக்கும், நீதியான இறைவனின் நியாயத்தை எடுத்துரைத்த எலியாவுக்குமிடையேயான பிரச்சனை.

இத்தகைய நீதிக்கான போராட்டத்தில் ஈடுபட்ட எலியாவின் நிலை எவ்வளவு பரிதாபமாக இருந்தது என்பதையே “அவர் அங்கிருந்த கெபியில் வந்து அதில் இரவைக் கழித்தார்” என்ற 19-ம் அதிகாரத்தின் வசனங்கள் எடுத்துரைக்கின்றன.

இங்கே ‘கெபி’, ‘இருள்’ முதலியவை அவருடைய வாழ்வுச்சூழலை விளக்கும் அடையாளச் சொற்களாக இருக்கின்றன. அதாவது தனது வாழ்வு வழிதெரியாத குகைக்குள் அடைபட்டதாக, இருளின் பிடியில் சிக்கி சீரழிவதாக எலியா உணர்ந்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இறைவன் அடக்கமான மெல்லிய ஒலியில் தன்னை அவருக்கு வெளிப்படுத்துகிறார். இந்த இறைவனின் வெளிப்பாடு, எலியாவுக்கு ஏராளமான சக்தியினை வழங்கி, பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான ஆற்றலை வழங்கியது. “உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்” (சங்.18:29) என்ற சங்கீதத்தின் வசனம் அவரது உள்ளத்தில் நிச்சயமாக எதிரொலித்திருக்கும்.

இப்படிப்பட்ட கர்த்தரின் மேலான உடனிருப்பையும், துணையையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டுமென்றால் அமைதி (Silence) என்பது மிக முக்கியமானது என்பதினை 1 இராஜா. 19-ம் அதிகாரம் தரும் முக்கிய செய்தி. தென்றலாக, மெல்லிசையாக, அடக்கமான ஒலியில் வரும் இறைவனை அமைதியில்தானே தரிசிக்கமுடியும். நாள்தோறும் அரைமணிநேரம் ஒதுக்கி, வெளியிலிருந்து வரும் சப்தங்களுக்கு நமது ஐம்புலன்களையும் அடைத்து, உள்ளிருந்து வரும் கவலை, தேவையற்ற சிந்தனை முதலியவற்றிற்கு நமது மனம் என்னும் கதவை அடைத்து, இதயமாகிய உள்ளறைக்குச் சென்றோமானால் (மத்தேயு 6:6) இறைவனைக் கண்டுகொள்ளமுடியும்.

எல்லாரும், எப்போதும் துணைபுரியும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை உறுதியுடன் நம்புவோம். துன்பங்களிலும், போராட்டங்களிலும் துணைபுரிய போதுமானவர்.

துணைபுரியும் இயேசுகிறிஸ்து உங்கள் அனைவருக்கும் நிறைவான மகிழ்வையும், அமைதியையும், ஆசியையும் அருளுவாராக.

இறைப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர்.

# செயலர் மடல்

கர்த்தரை நம்புகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது என்ற வாக்குத்தத்தத்தின்படி இஸ்ரவேலின் தேவன் நம் திருச்சபையின் குடும்பங்களை வேலியடைத்து பாதுகாத்து வருகிறதற்காக அவருக்கு துதியையும், கனத்தையும், மகிமையையும் செலுத்துகிறேன். இவ்வருடம் கோடை விடுமுறையை தாய் நாடு மற்றும் பிறதேசங்களில் மிகவும் சிறப்பாகக் கழித்து, பெற்றோர், உற்றார் உறவினர்களுடன் நல்ஐக்கியம் கொண்டு இத்தேசம் திரும்ப கிருபை செய்த தேவனுக்கு நன்றி செலுத்தி திருச்சபையின் அங்கத்தினர்களை வாழ்த்துகிறேன். உங்கள் விடுமுறை காலங்களைப் பரிசுத்தமாகவும், நல் ஐக்கியத்துடனும் செலவழித்திருப்பீர்கள் என்று கிறிஸ்துவுக்குள் நம்பி தேவனை மகிமைப் படுத்துகிறேன். மீண்டும் உங்கள் வேலைகளை திறம்படச் செய்ய தேவன் உங்களுக்கு பெலனையும், நல் ஆரோக்கியத்தையும் தந்து வழி நடத்துவாராக. தொடர்ந்து திருச்சபையின் ஐக்கியங்களில் பங்குபெற்று அதன் மூலம் நடைபெறும் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஊக்கமாக ஜெபிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதற்கேற்ற பலனை தேவன் அதினதின் காலங்களில் உங்களுக்கு தந்தருளுவாராக.

நாம் எல்லோரும் அறிந்தபடி நமது திருச்சபையின் அறுப்பின் பண்டிகைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம். இவ்வருடம் திரு. Allen Kingsley அவர்கள் convenor-ஆக நியமிக்கப்பட்டுள்ளர்கள். அவர்களுக்காகவும், அறுப்பின் பண்டிகையின் அனைத்து ஒழுங்குகளுக்காகவும் திருச்சபையார் ஊக்கமாக ஜெபிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஜூலை 6ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 31ஆம் தேதி வரை நமது திருச்சபையில் Summer Camp திருமதி.Sheeba Reginald அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் பங்குபெற்ற அனைத்து திருச்சபையின் சிறார்களுக்கும், அவர்களோடு இணைந்து இதற்காக ஜெபித்து உடன் ஊழியம் செய்த அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

ஆகஸ்ட் 10-ஆம் தேதி அன்று நம் தாய் நாட்டின் சுதந்தர தினத்தை நினைவு கூர்ந்து ஆலயத்தில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. அதில் நம் தாய் நாட்டிற்காக சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

இந்த மாதத்தின் அனைத்து நிகழ்வுகளுக்காகவும் விஷேசமாக, நம் அறுப்பின் பண்டிகையின் ஆயத்தங்களுக்காகவும் ஜெபிக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

Jernaus Britto, Secretary.

# PURIFICATION / SANCTIFICATION

We as children of God have the tendency to keep ourselves (the body) clean most of the time. But in Boston in 1842, it was unlawful to bathe except on a doctor's prescription. In 1843, Philadelphia made bathing illegal between November 1 and March 15. In the 15th century, Queen Isabella I of Spain boasted that she had only two baths in her life. One on her birth and the other, when she married King Ferdinand V. History concludes that, she was given a third bathe when she died. But it's not the case with us now. We discovered that Cleanliness is next to Godliness. Cleanliness plays vital role to our physical health. We try all possible means of ways to keep Water, Food, Air, House and everything clean. Supermarket shelves are being piled up with cleansing products to clean our body, house, environment, car, etc.

Have we ever thought of purifying/sanctifying our soul which needs to be presentable in the sight of God on His second coming? Sanctification and Holiness appears 1066 times in the Holy Bible. In GREEK, cleanliness means, free from guilt / being innocent, freedom from Contamination, Guilt & Evil. To make is simple, purity is the absence of impurity. Let us then understand how important sanctification is in the sight of God. Sanctification is the key element in our relationship with Him. It is the work of the Holy Spirit. Bible says in Eph.1:4 ... he hath chosen us in him before the foundation of the world, that we should be holy and without blame before him in love. We have been chosen to be Holy in His sight before the foundation of this Earth. 1Pet.1:16 say, because it is written, Be ye holy; for I am holy. God has called us to be pure. Sanctification is God's will. I Thes.4: 3-8 say, For this is the will of God, even your sanctification, that ye should abstain from fornication: That every one of you should know how to possess his vessel in sanctification and honor; Not in the lust of concupiscence, even as the Gentiles which know not God: That no man go beyond and defraud his brother in any matter: because that the Lord is the avenger of all such, as we also have forewarned you and testified. For God hath not called us unto uncleanness, but unto holiness. He therefore that despiseth, despiseth not man, but God, who hath also given unto us his holy Spirit.

All objects on this earth are being purified before use. But are our bodies, soul and mind being sanctified before we use them to fulfill God's divine purpose? Bible says that having clean hands is free from stains of un-confessed, un-repented sin.

Psalmist says who shall ascend into the hill of the LORD? Or who shall stand in his holy place? He that hath clean hands, and a pure heart; who hath not lifted up his soul unto vanity, nor sworn deceitfully (Ps 24:3, 4).

Continue...

## NEW MEMBERS LIST

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mr. S. Joseph Dominick | 2783 | Dubai |
| 2 | Mr. Jeyaprakash Kaniraja | 2784 | Dubai |
| 3 | Mr. Shajan Abrain Raj | 2785 | Dubai |
| 4 | Mr. Binukumar Bennet | 2786 | Dubai |
| 5 | Mr. David Pitchai Simon | 2787 | Dubai |
| 6 | Mr. K. Ashok | 2788 | Dubai |
| 7 | Mr. Johnson Durai Paul Raj | 2789 | Dubai |
| 8 | Mr. R. Retna Singh | 2790 | Dubai |
| 9 | Mr. Victor Johnraj | 2791 | Dubai |
| 10 | Mr. Merlin Jose T. | 2792 | Dubai |
| 11 | Mr. Christob Daniel Rajan Jeyakumar | 2793 | Fujairah |
| 12 | Mr. Kannan Durai | 2794 | Fujairah |
| 13 | Mr. Chelladurai M. | 2795 | Fujairah |
| 14 | Mr. J. Johin Immanuel | 2796 | Fujairah |
| 15 | Mr. M. Annidhas | 2797 | Fujairah |
| 16 | Mr. Jegan Sasi Varuvel | 2798 | Fujairah |
| 17 | Mr. G. Jebaraj Joshuva | 2799 | RAK |
| 18 | Mr. S. Deva Prakash | 2800 | RAK |
| 19 | Mr. Joel S. | 2801 | RAK |

தாயை அழைத்துவரவா என்று வினவின மிரியாம் நாம் அறிந்திருக்கிறபடி, அதன் தாயையே அழைத்துவர அவள் மறுபடியும் குழந்தையை வளர்க்கும் பொறுப்பைப் பெற்றார்.

இரண்டு ஆண்டுகளின் முடிவில், அக்குழந்தையை பார்வோனின் குமாரத்தியிடம் கொண்டுவர, அக்குழந்தை தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்டதால் அதற்கு, மோசே என்று பெயரிட்டாள் என்பது நாம் அறிந்தது. ஆனால் அம்ராம் இக்குழந்தை என் மனைவியோடே நான் சேர்ந்து வாழ காரணமாயிருந்தபடியால் அதற்கு 'கேபார்' என்று பெயரிட்டார்.

யோகபாத், சர்வவல்லவரை நான் நம்பினதால் அவர் எனக்கு இக்குழந்தையை திரும்பத் தந்தார் எனச் சொல்லி அதற்கு 'யெகுதியேல்' என்று பெயரிட்டார். மிரியாம், நான் இக்குழந்தையோடுகூட நதியில் இறங்கி இவன் முடிவு என்று அறிய முற்பட்டதால் அதற்கு 'யாரேத்' எனப் பெயரிட்டாள். ஆரோன், இவன் என் தாயைப் பிரிந்து சென்ற என் தகப்பன், திரும்பி வரக் காரணமாயிருந்தபடியால் அவனுக்கு 'அபிசானூக்' என்று பெயரிட்டான்.

கேகாத் என்னும் அம்ரானின் தகப்பன், இவன் நிமித்தமாக தேவன் யாக்கோபின் குடும்பத்தைத் தழைக்கச் செய்தார், எனவே இனி ஆண்பிள்ளைகள் நீரில் எறியப்படாமல் காக்கப்படும் என்று சொல்லி, 'அபிக்தோர்' என்று பெயரிட்டார்.

மோசேயின் தாதி, கர்த்தருடைய சந்நிதியில் மூன்று மாதம் வரை ஒளித்து வைக்கப்பட்டபடியால் இவனுக்கு 'அபிசோகோ' என்று பெயரிட்டார். இஸ்ரவேலர் அந்நாட்களில் தேவன் தங்களது அழுகையின் சத்தத்தைக் கேட்டு, தங்களை அடிமைப்படுத்தியவர்களின் கைக்கு விடுவித்தபடியால் அவருக்கு, 'சிமேயா' எனப் பெயரிட்டார்கள். இவ்வாறு மோசே, பார்வோனின் குமாரத்தியின் மகனாக, மோசேயாக, இராஜ குமாரரில் ஒருவராக வளர்ந்து வந்தார்.

மோசே மூன்று வயதாகும்போது, ஒரு விருந்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தார். அவ்விருந்திற்கு வந்திருந்த பார்வோனுடன், பார்வோனின் மனைவி அவரது வலது புறம் அமர்ந்திருந்தார். பார்வோனின் குமாரத்தி அவரது இடது புறத்திலும் மோசே அவருடைய மடியிலும் இருந்தார். பேயேரும் அவரது இரண்டு குமாரரும் மற்றும் அரண்மனையின் அனைத்து ராஜகுமாரரும் ராஜாவின் பிரசன்னத்திற்கு வந்திருந்தனர். அப்பொழுது மோசே தன்னுடைய கையை நீட்டி, ராஜாவின் தலையிலிருந்த மகுடத்தை எடுத்து தன்னுடைய தலையில் வைத்துக்கொண்டார். இதைக்கண்ட பார்வோனும் மற்ற ராஜகுமாரரும் அதிர்ச்சியடைந்து, ஒருவரோடொருவர் ஆச்சரியப்பட்டு பேசலாயினர்.

பார்வோன் தன்னுடைய மேஜையில் தன்னோடு அமர்ந்திருந்த அவர்களைப் பார்த்து, நீங்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வதென்ன? இக்குழந்தையின் இச்செயலுக்காக, என்ன தகுந்த தண்டனை அளிக்கலாம்?

மந்திரவாதியான பேயோரின் மகன் பாலாம் பார்வோனைப் பார்த்து, “ஓ எங்கள் ஆண்டவனே, இக்குழந்தை தேவனுடைய ஆவி தங்கியுள்ள ஒரு எபிரெயக் குழந்தை. எனவே இக்குழந்தை ஏதோ அறியாமல் செய்தது என்று தவறாக எண்ணவேண்டாம். இவன் எபிரெயக் குழந்தையாக இருக்கிறபடியால் இவனுடைய அறிவும் ஞானமும் இவனுக்குள் இருக்கிறது. இவன் இதை தன்னுடைய ஞானத்தால் செய்து, எகிப்தையே தனக்காகத் தெரிந்துகொண்டுள்ளான். இப்படிதான் எபிரெயர்கள் அரசனையும் அவரோடிருக்கிற பிரபுக்களையும் ஏமாற்றி, தந்திரமாக எல்லாவற்றையும் செய்து ராஜாக்களையும், அவரோடுள்ள மற்ற மக்களையும் கலங்கச் செய்வார்கள். ஆபிரகாம் என்னும் இவனது முற்பிதா கேரராரின் ராஜாவாகிய அபிமெலக்கை, தன்னுடைய மனைவியாகிய சாராளை சகோதரி எனக்கூறி ஏமாற்றினார். அப்படியே ஈசாக்கும் தன்னுடைய மனைவியாகிய ரெபேக்காளை சகோதரி எனக் கூறி தந்திரமாக ஏமாற்றினார். யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாயின் புத்திர சுவிகாரத்தையும் ஆசீர்வாதத்தையும் ஏமாற்றி பெற்றுக்கொண்டார்”.

தொடரும்...

நன்றி:யாசேரின் புத்தகம்.

தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## MEMORY VERSE CONTEST - 2018

**The Memory Verse Contest for the year 2018**

**will be conducted on 14th September 2018.**

**Please download the memory verses (Grade wise)**

**from our church website and make the children**

**LEARN AND BE BLESSED.**

Answers sent by the following children for July - August 2018

Grade 6 to Grade 8

1. Hannah Liprens Livingston
2. Dany Solomon Livingston

Grade 9 and above

1. Alston Samuel Alwyn

பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : அமைதியில் இறைவனைக் காணுவோம்
ஆராதனை இறுதி கவி : கீர்த்தனை 164 கவி 1,4,5

07-09-2018

| | | |
|---|---|---|
| பாமாலை | 32 | மகிழ்ச்சி ஓய்வுநாளே! |
| பாமாலை | 131 | பாதை காட்டும் மாயெகோவா |
| கீர்த்தனை | 148 | பாதம் ஒன்றே வேண்டும் |
| | | பாத்திரம் நிரம்பி வழிகின்றதே |
| கீர்த்தனை | 188 | தாரகமே பசிதாகத்துடன் |

14-09-2018

| | | |
|---|---|---|
| பாமாலை | 5 | உன்னதம், ஆழம் |
| கீர்த்தனை | 137 | உன்னையன்றி வேறே கெதி |
| பாமாலை | 114 | என் மீட்பர் ரத்தம் |
| கீர்த்தனை | 100 | வேறு ஜென்மம் வேணும் |
| | | வாசலண்டை நிற்கும் நேசரை |
| கீர்த்தனை | 123 | என் மீட்பர் உயிரோடிருக்கையிலே |

21-09-2018

| | | |
|---|---|---|
| பாமாலை | 43 | விண்ணோர்கள் போற்றும் |
| | | பயணிகள் பாதையில் |
| கீர்த்தனை | 173 | தந்தானைத் துதிப்போமே |
| கீர்த்தனை | 161 | என்னை ஜீவபலியாய் |
| கீர்த்தனை | 147 | பரனே திருக்கடைக்கண் |

28-09-2018

| | | |
|---|---|---|
| பாமாலை | 9 | எல்லாருக்கும் மா உன்னதர் |
| | | பாவம் என்னைத் தொடர்ந்தாலும் |
| பாமாலை | 163 | ஆ, சகோதரர் ஒன்றாய் |
| | | மனம் இசைந்து அனைவரும் |
| கீர்த்தனை | 119 | கிஞ்சிதமும் நெஞ்சே |
| கீர்த்தனை | 141 | கிருபை புரிந்தெனை |

# நீங்கள் கிறிஸ்தவரா...

அவர் பூமியின்மேல் மழையை வருஷிக்கப்பண்ணி வெளிநிலங்களின் மேல் தண்ணீர்களை வருவிக்கிறார். யோபு 5:11

வீணையிலிருந்து
நாதமும்
பூவிலிருந்து
மணமும்
பிரிக்கமுடியாது
இறை இயேசுவை
சார்ந்து
இருப்பதே
ஜீவனுக்குள்ள நிலை
ஜீவன்...
வாழ்வதும்
இயங்குவதும்
இயேசுவின்
அருளென உணர்க
இயேசு...
உலகிலுள்ள
எல்லாவற்றையும்
ஆனந்தமாக்கவும்
ஆசீர்வதிக்கவும்
அன்பை பெருக்கவும்
வல்லவராக
இருக்கிறார்.
இயேசுவின் நாமம்
தரித்திரரை
செல்வந்தராக்கும்
பசித்தவருக்கு
உணவையும்
திக்கற்றவருக்கு
தைரியத்தையும்
பார்வை
இல்லாதவருக்கு
ஒளியையும் தரும்.

நீர் உயர
நிலம் உயரும்
நீரால் ஆவது
உலகென்றும்
மாதம் மும்மாரி
பொழியுமென்றும்
புலவர்கள் புனைந்த
கவிதை...
தண்ணீருக்கு
தட்டுப்பாடுமில்லை
கட்டுப்பாடுமில்லை
ஊரெல்லாம்
தண்ணீர் பந்தல்
அமைத்து
தாகத்துக்கு
தண்ணீர் கொடுத்த
தயையுள்ள
காலம் ஒன்று
இருந்தது
காவிரி ஆறு
கரைபுரண்டு
ஓடுமென்றும்
நாடு செழிக்கும்
வீடு செழிக்குமென்றும்
வற்றாத ஜீவ
நதிகளென்றும்
சொன்ன காலம்
ஒன்று இருந்தது.
தண்ணீர்
எங்களுக்கே
பற்றாக்குறையென்று
வழக்காடு

மன்றம் போய்
முறையீடு, இத்தனை
விழுக்காடு
வேண்டுமென்று
முழக்கமிட்டு
போராடுவது
இன்றைய காலம்
தண்ணீருக்காக
தாய்மார்கள்
கண்ணீருடன்
காத்திருக்கும்
அச்சம்
காலிகுடங்களுடன்
கால்வலிக்க
வரிசையில்
நிற்பதுதான்
மிச்சம்.
தண்ணீருக்காக
ஓயாது ஒலிக்கிறது
கூப்பாடு.
ஆனாலும் பாருங்க
அதிசயம்...
தண்ணீரை
பாட்டிலில் அடைத்து
வீட்டில் கொண்டு
விற்பதுதான்
வியாபார
கோட்பாடு.
இதுதாங்க
வளர்ச்சியின்
மேம்பாடு.

தொடரும்...

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

"கர்த்தாவே, இரட்சியும்; நாங்கள் கூப்பிடுகிற நாளிலே
ராஜா எங்களுக்குச் செவிகொடுப்பாராக." சங்கீதம் 20:9

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- விடுமுறைக்காலங்களில் கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காகவும், பாதுகாப்புக்காகவும், Summer Camp சிறப்பாக நடைபெறச்செய்த கரிசனைக்காகவும் அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
